අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +9411 2785818
info@moe.gov.lk www. moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. } ED/9/18/10/12-I

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. }

දිනය / திகதி / Date } 2024.08. 20

சுற்றுநிருப இலக்கம் : 28/2024

அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலய க் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து மாகாண/ வலய விசேட கல்விப் பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து மாகாண/ வலய ஆரம்பக் கல்விப் பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து கல்வியியல் கல்லூரிகளதும் பீடாதிபதிகள்/ ஆசிரியர் கல்லூரி அதிபர்கள்,
அனைத்து அரச பாடசாலை அதிபர்கள், விசேட/ ஆரம்பக் கல்வி ஆசிரியர் ஆலோசகர்கள்,
அனைத்து அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் மற்றும் உதவி பெறும் விசேட பாடசாலைகளின் அதிபர்கள்,
அனைத்து உதவி பெறும் பாடசாலைகளதும் முகாமையாளர்கள்,

**உதவிபெறும் விசேட பாடசாலைகளில் பண்புத்தரம் மிக்க கல்வியை உறுதிப்படுத்துவதற்கான சுற்றுநிருபம்**

1.0 1939ம் ஆண்டு 31ம் இலக்க கல்விக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைவாக அதன் vம் பகுதியின் 37வது ஒழுங்குவிதி மற்றும் விசேடமாக அதன் iii இல் விசேட பாடசாலைகள் (a) பந்திக்கமைய ஒழுங்குவிதிகளை விதிப்பதற்காக கௌரவ கல்வி அமைச்சருக்கு உள்ள அதிகாரத்திற்கமைய உதவி பெறும் விசேட பாடசாலைகளைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்டுள்ள ஆங்கில உதவி பெறும் பாடசாலைகள் யாப்பிற்கு மேலதிகமாக உதவி பெறும் விசேட பாடசாலைகளில் பண்புத்தரம் மிக்க கல்வியை உறுதிப்படுத்துவதற்காக சுற்றுநிருபமொன்றை வெளியிடுமாறு கௌரவ கல்வி அமைச்சரால் என்னிடத்தில் அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த அதிகாரக் கையளிப்பிற்கு ஏற்ப உதவி பெறும் விசேட பாடசாலைகளில் பண்புத்தரம் மிக்க கல்வியை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் நோக்குடன் இச் சுற்றுநிருபம் வெளியிடப்படுகின்றது.

விசேட தேவைகளுடன் கூடிய சிறுவர்களுக்கு கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் போது உதவி பெறும் விசேட பாடசாலைகளுக்கு விசேடமான வகிபாகம் காணப்படுகின்றது. சிறுவர்களது கல்வியின் பண்புத்தரத்தை உயர் மட்டத்தில் பேணுதல், பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் நலன்புரி, ஆசிரியர்களது இயலளவினை விருத்தி செய்ய நடவடிக்கையெடுத்தல் ஆகியன அவற்றுள் பிரதானமானவையாகும். உதவி பெறும் விசேட பாடசாலைகளின் முகாமையாளர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் அப் பணிகளில் விளைதிறன் மிக்க வகையில் செயற்படுவது அத்தியாவசியமாகும். அதற்கு அவசியமான செயன்முறைகளை அமைத்துக் கொள்அதற்காகவும், தேவையான வழிகாட்டல்கள் மற்றும் கண்காணிப்பு செயற்பாடுகளுக்காகவும், கல்வி நிறுவனங்கள் மற்றும் உரிய உத்தியோகத்தர்களுக்கு அதிகாரங்களை வழங்குவதற்காகவும் இந்த சுற்றுநிருபத்தினூடாக வழிகாட்டல் வழங்கப்படுகின்றது.

**2.0 உதவி பெறும் விசேட பாடசாலைகளில் பண்புத்தரம் மிக்க கல்வி அபிவிருத்திக்காக பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள்**

2.1 அனைத்து உதவி பெறும் விசேட பாடசாலைகளிலும் பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குழு ஒன்று நியமிக்கப்படல் வேண்டும்.

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister } +94112784832 / +94112784825 / minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary } +94112784811 / +94112785162 / secretary.education@moe.gov.lk

CamScanner

2.13 கோட்டம், வலயம், மாகாணம் மற்றும் தேசிய மட்டப் பரீட்சைகளுக்கு மாணவர்களை தயார்படுத்துதல், பரீட்சைகளை ஒழுங்கு செய்தல், நடாத்துதல் மற்றும் மாணவர்களை கலந்துகொள்ளச் செய்தல் வேண்டும்.

2.14 கோட்டக் கல்வி அலுவலகம், வலயக் கல்வி அலுவலகம், மாகாணக் கல்வித் திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சு மட்டத்தில் நடாத்தப்படும் சேவையில் பயிற்சி செயலமர்வுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களில் உதவி பெறும் விசேட பாடசாலைகளின் ஆசிரியர்களையும் பங்கேற்கச் செய்வதற்குரிய நடவடிக்கைகளை அதிபர் எடுக்க வேண்டும் என்பதுடன் அவற்றில் கலந்து கொள்வது ஆசிரியர்களதும் பொறுப்பாகும்.

2.15 *1980* மனித வலுவின் குறை பாவனை தொடர்பிலான சுற்றுநிருபத்திற்கமைய பாடசாலை ஆரம்பிப்பதற்கு *15* நிமிடங்களுக்கு முன்னரேனும் வரவுக் பதிவேட்டில் கையொப்பமிடுதல், சேவைக் காலத்தினுள் சுறுசுறுப்பாக கடமைகளை செய்தல், அதிபர் அல்லது உரிய பாடசாலை பிரதானியினால் பொறுப்பளிக்கப்படும் பதில் பாடவேளைகளை நடைமுறைப்படுத்துவதில் உதவுதல், தனிப்பட்ட லீவு பெற்றுக் கொள்ளும் போது இரண்டு லீவு விண்ணப்பப் படிவங்களை அதிபரிடம் சமர்ப்பித்து ஒரு அனுமதிக்கப்பட்ட பிரதியினை மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

2.16 பாடசாலைக் கல்வியின் பண்புத்தரத்தை உறுதி செய்வதற்கான மதிப்பீட்டுச் செயன்முறைக்குரியதாக கல்வி அமைச்சினால் "எமது பாடசாலை எந்தளவு தரமானது?" எனும் தலைப்பின் கீழ் வெளியிடப்பட்ட *31/2014* மற்றும் *2014.12.02*ம் திகதியுடைய சுற்றுநிருபத்துடன் பொருந்தும் வகையில் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

2.17 மேலே *2.16* இல் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுநிருபத்துடன் பொருந்தும் வகையில் செயற்படும் போது ஆசிரியர் குழாத்தினர் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டுத் துறைகளுக்குரிய குழுக்களுக்கு நியமிக்கப்படல் வேண்டும். பாடசாலையில் பணியாற்றும் ஆசிரியர்களது எண்ணிக்கைக்கமைய ஒவ்வொரு துறைகளுக்கும் உரிய குழுக்களுக்கு நியமிக்கப்பட வேண்டிய ஆசிரியர்களது எண்ணிக்கை தீர்மானிக்கப்படல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு துறைகளுக்கு குழுத் தலைவர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

2.18 பாடசாலை உள்ளக மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் அதிபரால் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். அதற்காக உள்ளக மேற்பார்வைக் குழுவொன்றை பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர்களை உள்ளடக்கி நியமித்துக் கொள்ள வேண்டும்.

2.19 பாடசாலையில் ஒழுக்கத்தைப் பேணுவதற்காக ஒழுக்காற்றுக் குழு ஒன்றை நியமிப்பதுடன், அது தொடர்பில் அறிக்கைகளை பேணுதல் வேண்டும். ஆலோசனை மற்றும் வழிகாட்டல் செயற்பாடுகளுக்காக ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும் என்பதுடன் பாடசாலை மட்டத்தில் ஆலோசனை மற்றும் தொழில் வழிகாட்டலுக்கான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

2.20 கல்வி அமைச்சினால் மன வளர்ச்சி குன்றி மாணவர்களது கற்றல் கற்பித்தல் செயன்முறைக்காக தயாரிக்கப்பட்ட "உட்படுத்தல் கல்வியை நோக்கி... ஆசிரியர் வழிகாட்டல் ii" ஐ நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன் உச்ச பட்சம் *02* வருடங்களின் நிறைவில் குறித்த மாணவர்களுக்கு பொதுக் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

2.21 ஒரு தவணைக்கு ஒரு தடவையேனும் வகுப்பறை கண்காணிப்புக்களை ஒழுங்கு செய்தல் மற்றும் நடாத்துதல். அவற்றில் அறிக்கைகளை பேணும் செயற்பாடுகள் ஆசிரியரால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2.22 ஆசிரியர்கள் பாடசாலைக்கு வெளியே உள்ள நிறுவனங்களுக்கு நேரடியாக கடிதங்களை அனுப்புதல் அல்லது ஊடகத்திற்கு கருத்துக்களை முன்வைத்தல் ஆகியவற்றை செய்ய முடியாது என்பதுடன் அதிபர்/ முகாமையாளரூடாக கடிதங்கள் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அத்துடன் நிறுவனத் தலைவரின் அனுமதியின்றி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்க முடியாது.



CamScanner

**3.0 உதவி பெறும் விசேட பாடசாலைகளில் பண்புத்தரம் மிக்க கல்வி அபிவிருத்திக்காக கோட்டக் கல்விப் பணிப்பாளரின் பணிகள்**

3.1 ஆசிரியர் செயலாற்றுகை மதிப்பீட்டின் போது ஆசிரியர்களது அளவீட்டாளர்களாக செயற்படல் வேண்டும் என்பதுடன் அதிபர் மற்றும் பிரதி அதிபர்களது மதிப்பீட்டாளராகவும் செயற்படல் வேண்டும். (குறித்த பதவிகளுக்கு கல்வி அமைச்சின் அனுமதி காணப்படல் வேண்டும்.)

3.2 வருட அறிக்கைப் புத்தகங்கள், வருடாந்த கணக்கெடுப்பு அறிக்கைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், ஆசிரியர் வழிகாட்டிகள், பெயர் பட்டியல்கள், சீருடைகள் மற்றும் சுரக்ஷா காப்புறுதி வழங்குவதற்கு அவசியமான நடவடிக்கைகளை உரிய காலப் பகுதியில் மேற்கொள்ள வேண்டும்.

3.3 பாடசாலை மட்ட மற்றும் தேசிய மட்ட பரீட்சைகளுக்கு மாணவர்களை பதிவு செய்வதற்கு அவசியமான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் தேவையான உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 வலயக் கல்வி அலுவலகம் மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்படும் தவணைப் பரீட்சை மற்றும் ஆண்டிறுதிப் பரீட்சைகளுக்கான வினாப் பத்திரங்கள், விடைத்தாள்களை வழங்கி பரீட்சையை நடாத்துவதற்கு உதவுதல் வேண்டும்.

3.5 பாடசாலையில் கல்வியின் பண்புத் தரத்தை விருத்தி செய்வதற்காக வெளிவாரி மதிப்பீட்டுச் செயன்முறையினை மேற்கொள்ளல் மற்றும் *31/2014* சுற்றுநிருபம் தொடர்பில் செயற்படல் வேண்டும். வெளிவாரி மதிப்பீடு மற்றும் உள்ளக மதிப்பீட்டினூடாக கண்டறியப்படும் விடயங்கள் மற்றும் அதற்காக பாடசாலையினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் பரிசோதித்தல் வேண்டும். அதனூடாக கண்டறியப்படும் விடயங்களுக்கு அமைவாக பாடசாலையின் பண்புத் தர விருத்திக்கு அவசியமான செயலுபாயங்கள் தொடர்பில் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்.

3.6 கோட்டக் கல்வி அலுவலகத்தினால் ஒழுங்கு செய்யப்படும் ஆசிரியர்/ அதிபர்களுக்கான சேவையில் பயிற்சி மற்றும் பயிற்சி செயலமர்வுகளில் உதவி பெறும் விசேட பாடசாலை ஆசிரியர்கள்/ அதிபர்களையும் கலந்து கொள்ளச் செய்ய நடவடிக்கையெடுத்தல்.

3.7 உதவி பெறும் விசேட பாடசாலை அதிபர்களின் லீவுகளுக்கு அனுமதி வழங்குதல்.

3.8 கோட்ட மட்டத்தில் நடைமுறையில் உள்ள அனைத்து இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் இப் பாடசாலை மாணவர்களையும் பங்கேற்கச் செய்தல் வேண்டும்.

**4.0 உதவி பெறும் விசேட பாடசாலைகளில் பண்புத்தரம் மிக்க கல்வி அபிவிருத்திக்காக வலயக் கல்விப் பணிப்பாளரின் பணிகள்**

4.1 உதவி பெறும் விசேட பாடசாலைகளால் தயாரிக்கப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்ட ஐந்தாண்டு திட்டம், வருடாந்த நடைமுறைப்படுத்தல் திட்டம், வருடாந்த நாட்காட்டி, பாடசாலை கால அட்டவணை ஆகியவற்றிற்கு அனுமதி வழங்க வேண்டும்.

4.2 உதவி பெறும் விசேட பாடசாலையின் முகாமையாளர் பதவிக்கு நிர்வாக சபையினால் பிரேரிக்கப்படும் பெயர்களை பரிசீலித்து உரிய பரிந்துரைகளுடன் மாகாணக் கல்விப் பணிப்பாளரூடாக கல்வி அமைச்சின் அனுமதிக்காக சமர்ப்பித்தல் வேண்டும்.

4.3 முகாமையாளரால் முன்மொழியப்படும் தொண்டர் ஆசிரியர் நியமனங்களை பரிசீலித்து, பரிந்துரை சகிதம் கல்வி அமைச்சின் அனுமதிக்கா சமர்ப்பித்தல், அதற்காக தொண்டர் ஆசிரியராக ஆகக் குறைந்து ஒரு வருட காலத்திற்கு வெற்றிகரமாக கற்பித்து அனுபவம் பெற்றிருத்தல், தேவையான தகைமைகளைக் கொண்டிருத்தல் மற்றும் குறித்த பாடசாலைகளில் வெற்றிடங்கள் நிலவும் பட்சத்தில் முறையாக நியமனம் வழங்குவதற்காக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு பரிந்துரை சகிதம் சமர்ப்பித்தல்.



CamScanner

5.6 உதவி பெறும் விசேட பாடசாலைகளின் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் தொடர்பில் தாபனச் செயற்பாடுகளுக்காக கோவைகளைப் பேணுதல் வேண்டும்.

5.7 உதவிபெறும் விசேட பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களது ஓய்வுபெறச் செய்வதற்காக உரிய வலயக் கல்விப் பணிப்பாளரது பரிந்துரையுடன் கூடிய விண்ணப்பப் படிவத்தை பரிசோதித்து மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரை சகிதம் கல்வி அமைச்சின் செயலாளருக்கு முன்னிலைப்படுத்துதல் வேண்டும்.

5.8 மாகாண மட்டத்தில் நடைமுறையில் உள்ள அதிபர் கூட்டங்கள், அதிபர் மற்றும் ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்துகொள்ளுமாறு உதவிபெறும் விசேட பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களையும் அழைத்தல் வேண்டும்.

5.9 கல்வி அமைச்சின் இல. *31/2014* சுற்றுநிருபத்திற்கமைய இடம்பெறும் பாடசாலை வெளிவாரிக் கண்காணிப்புடன் இணைந்ததாக தங்களது பாடசாலையின் உதவி பெறும் பாடசாலைகளும் கண்காணிக்கப்படல் வேண்டும்.

5.10 மாகாண மட்டத்தில் நடாத்தப்படும் மாணவர் அடைவு மட்டங்களை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள், பாடசாலை தவணைப் பரீட்சை மற்றும் மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் இணைப் பாடவிதான நிகழ்ச்சித்திட்டங்களில் உதவி பெறும் பாடசாலை மாணவர்களையும் பங்கேற்கச் செய்தல் வேண்டும்.

Jayasundara

**ஜே.எம் திலகா ஜயசுந்தர**
செயலாளர்
கல்வி அமைச்சு

__பிரதிகள்:__

1. அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்
2. அனைத்து மேலதிக செயலாளர்கள், கல்வி அமைச்சு
3. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
4. பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சை திணைக்களம்
5. கல்வி வெளியிட்டு ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
6. பிரதம ஆணையாளர் (ஆசிரியர் தாபனம்), கல்வி அமைச்சு
7. அனைத்து பாடப் பணிப்பாளர்கள், கல்வி அமைச்சு



CamScanner